# குமரகுருபர சுவாமிகள்

தென்னிந்தியாவிலே திருநெல்வேலி மாவட்டம் உள்ளது. அங்கு உள்ள புண்ணியத் தலங்களுள் 'ஸ்ரீவைகுண்டம்' என்பதும் ஒன்றாகும். பொருநை ஆற்றின் வட கரையில் உள்ள அவ்வூரிலே சண்முகசிகாமணிக் கவிராயரும் அவர் மனைவி சிவகாமசுந்தரி அம்மையாரும் வசித்து வந்தனர். அவர்கள் நல்லொழுக்கமுந் தெய்வ பக்தியும் நிரம்பப் பெற்றவர்கள். அவர்கள் கலியுக வரதன் ஆகிய முருகப் பெருமானை வழிபட்டு வந்தனர்.



ஒரு நன்னாளில் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. குலதெய்வமான முருகன் அருளாற் பிறந்த தங்கள் குழந்தைக்கு குமரகுருபரன் என்று பெயர் சூட்டினர். பார்த்தவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் குமரகுருபரன் வளர்ந்து வந்தான். ஐந்து வயதாகி விட்டது. பெற்றோர் அவனுக்குப் பேசக் கற்றுக் கொடுத்த முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை. குமரகுருபரன் வாய் பேச முடியாமல் இருப்பதைப் பார்த்த பெற்றோர் வருந்தித் துடித்தனர்.



"எமது குழந்தை குமரஹகுருபரன் முருகப்பெருமான் எமக்குக் கொடுத்த வரம்; முருகப்பெருமான்தான் குழந்தைக்குப் பேசும் ஆற்றலைத்தர முடியும். அவனிடமே சென்று முறையிடுவோம்" என்று பெற்றோர் முடிவு செய்தனர். குழந்தையை அழைத்துக் கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலிருந்து இருபது மைல் தொலைவில் உள்ள திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்குச் சென்றனர். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூரில் கடற்கரையில் அழகன் முருகன் ஆலயமாகக் காட்சி தருகிறது. அதனால் திருச்செந்தூர் திருச்சீரலைவாய் என்றும் அழைக்கப்படுகிறது. அவ்வாலயத்தில், தம் குழந்தை வாய் திறந்து பேசுவதற்காக விரதம் இருந்தனர்.

பல நாட்கள் விரதம் இருந்து முருகனை வேண்டிக் கொண்டதன் பலன் ஒரு நாள் தெரிந்தது. குமரகுருபரன் வாய் திறந்து ஏதோ பேச முற்பட்டது போலத் தோன்றியது. குமரகுருபரன் சில சொற்களை ஒலித்தான்.

அடுத்த நொடியில் அவன் கார்மேகம் பொழிவது போலக் கவிமழை பொழியத் தொடங்கினான். முருகப் பெருமானின் அருளைப் போற்றும் அற்புதப் பாடல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் குமரகுருபரன் வாயிலிருந்து புரண்டு ஓடி வந்தன. தேனினும் இனிய தமிழில் அவர் பாடிய அப்பாடல்கள் 'கந்தர் கலி வெண்பா' எனப்படும். அதுவே குமரகுருபரரின் முதல் நூலாகும். முருகனின் 'சரவணபவ' என்ற ஆறெழுத்து மந்திரத்தின் மகிமையையும், முருகனின் அழகையும் அவர் அந்நூலிற் சிறப்பாகப் பாடியுள்ளார்.

“குமரா, உன் கருணை இருந்தால், பேச்சுத்திறன் மட்டுமல்ல, பெருங் கவிஞனாயும் மலர முடியும் என்பதைக் காட்டி விட்டாய். உன் அருளே அருள்!” என்று கவிராயரும் அவர் மனைவியும் உள்ளம் நெகிழ்ந்து நன்றி கூறி வணங்கினர். பின்னர், மூவரும் தங்கள் ஊர் திரும்பினர்.

இளமைப் பருவத்தை எட்டியபோது, பெற்றோரின் அனுமதியோடு தல யாத்திரைக்குக் குமரகுருபரர் புறப்பட்டார். இளமைக் காலத்திலேயே துறவறத்தை மேற்கொண்டார். 'குமரகுருபர சுவாமிகள்' என்று போற்றப்பட்டார்.

குமரகுருபரசுவாமிகள் மதுரை நகருக்கு வந்து சேர்ந்தார். அங்குள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தை அடைந்தார். அம்பாளின் சந்நிதியில் நின்றபோது, அவர் உள்ளத்திலே பேரானந்த வெள்ளம் பெருகியது. அந்த அனுபவத்தின் காரணமாக 'மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்' என்ற ஒப்பில்லாத பக்திநூல் வெளிப்பட்டது. அக்காலத்தில் மதுரையைத் திருமலை நாயக்கர் என்ற மன்னன் அரசாண்டு வந்தான். குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு திருமலை நாயக்கருக்குக் கனவிலே பணிப்புரை விடுக்கப்பட்டது.

மீனாட்சி அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபத்திலேயே நூலின் அரங்கேற்றத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புலவர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் எனப் பலருந் திரண்டிருந்தனர். குமரகுருபரர் சகல



மரியாதைகளுடனும் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டார். முதலில் மீனாட்சி அம்மையை வணங்கி விட்டுத் தமக்கு இடப்பட்ட மேடையில் அமர்ந்தார். 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின்' அரங்கேற்றம் தொடங்கியது. குமரகுருபரர் ஒவ்வொரு பாடலையும் படித்துப் பொருள் கூறும் நேர்த்தியை அனைவரும் அமைதியாகக் கேட்டிருந்தனர்.



அப்போது அங்கே ஒரு சிறுமி நுழைந்தாள். அவள் அக்கோயில் அர்ச்சகரின் மகள் போலக் காணப்பட்டாள். அவள் நேராகச் சென்று மிகுந்த உரிமையோடு மன்னன் மடியில் அமர்ந்து கொண்டாள். குமரகுருபரரின் உரையில் அனைவரும் தம்மை மறந்து இருந்தனர். சிறுமி சட்டென்று எழுந்தாள். நாயக்கர் கழுத்தில் விளங்கிய முத்துமாலையை உரிமையோடு கழற்றிக் குமரகுருபரருக்கு அணிவித்தாள். அவள் அம்மண்டபத்தை விட்டு மூலஸ்தானத்தை நோக்கி நடக்கையிலே பேரொளி ஒன்று தோன்றி மறைந்தது. தன் மீதான பிள்ளைத் தமிழைத் தன் குழந்தையே பாடக் கேட்டு இன்புறக் குழந்தை வடிவில் வந்தவள் அந்த மீனாட்சி அம்மையே என்பதை உணர்ந்தவுடன் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர்.



வடநாடு சென்ற குமரகுருபரர் வடமொழியறிவைத் தமக்குத் தரும்படி கேட்டு, கலைவாணியின் அருள் வேண்டி ஒரு துதிப்பாமாலை பாடினார். "வெண்டாமரைக் கன்றிநின் பதந் தாங்க" எனத் தொடங்கும் சகலகலா வல்லிமாலை என்ற அப் பிரபந்தத்தைப் பாடி முடித்ததும், வடநாட்டு

மொழியான ஹிந்துஸ்தானி மொழியில் பூரண அறிவைப் பெற்றுக் கொண்டார். வட இந்தியாவிலே மிகப் புனிதமான நதியாக விளங்கும் கங்கைக் கரையில் உள்ள காசி என்னும் தலம் முக்தி தரும் தலமாகும். அங்கு கோயில் கொண்ட சிவபெருமானை விசுவநாதர் என்று மக்கள் வழிபடுவது உண்டு. அத்தலத்திலே அக்காலத்தில் 'குமாரசுவாமி மடம்' என்ற பெயரில் குமரகுருபரர் ஒரு மடத்தை நிறுவினார். அங்கிருந்து சைவசமயச் சொற்பொழிவாற்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இன்றும், அம்மடம் அப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

**"மொழிக்குத் துணை முருகா வெனும் நாமம்"**

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) குமரகுருபரனின் பெற்றோர் யாவர்?
(2) குமரகுருபரனைப் பெற்றோர் ஏன் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்றனர்?
(3) யாருடைய அருளால் குமரகுருபரன் பேசத் தொடங்கினான்?
(4) குமரகுருபரர் முதலில் பாடிய பாடல்கள் தொகுப்பு எது?
(5) முருகனின் ஆறெழுத்து மந்திரம் என்ன?
(6) குமரகுருபரர் இளமைக் காலத்திற் துறவறத்தை மேற்கொண்டதால் எவ்வாறு அழைக்கப்பட்டார்.
(7) குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் எந்தக் கோயிலில் அரங்கேற்றப்பட்டது.
(8) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேற்றத்தின்போது அங்கு தோன்றிய சிறுமி யார்? அவர் என்ன செய்தார்?
(9) குமரகுருபரர் கலைவாணியைத் துதித்துப் பாடிய பாடல்களின் தொகுப்பு எது?
(10) காசி என்னும் தலத்தில் குமரகுருபரர் நிறுவிய மடத்தின் பெயரென்ன?

## செயற்பாடு

* நவராத்திரி விழாக் காலங்களில் 'சகலகலாவல்லிமாலைப் பாடல்களை இசையோடும் பக்தியோடும் ஓதுங்கள்.